**தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை-6**

ந.க.எண்.50510/பிடி2/இ2/2021, நாள்.21 .09.2022

*****

**பொருள்:** பள்ளிக் கல்வி – அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்வி பாடத் திட்டம் மறுசீரமைக்கப்பட்டது – வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills) பாடத்திற்கு மதிப்பெண்கள் வழங்குதல் – சார்ந்து.

**பார்வை:**

1. அரசாணை (நிலை) எண்.173, பள்ளிக்கல்வித் (பக7(1)) துறை நாள்.13.12.2021.
2. சென்னை-6, பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள், ந.க.எண்.50510/பிடி2/இ2/2021, நாள்.01.08.2022.
3. அரசாணை (நிலை) எண்.125, பள்ளிக்கல்வித் (பக7(1)) துறை நாள்.15.07.2022.

*****

2021-2022-ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தொழிற்கல்வி பாடத்திட்டத்தினை சீரமைப்பது சார்ந்து வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில், தொழிற்கல்வி பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை சீரமைக்க (Revamping of Vocational Syllabus and Textbook) உயர்மட்ட வல்லுநர் குழு பார்வை 1இல் கண்ட அரசாணையின்படி அமைக்கப்பட்டு, இவ்வல்லுநர் குழு மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தும் விதமாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC), பாடநூல் வல்லுநர்கள் மேலாய்வாளர்கள், பாடநூல் ஆசிரியர்கள், தொழில்நுட்ப பாடநூல் வல்லுநர்கள் மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிறுவன பயிற்றுநர்களுடன் இணைந்து மேல்நிலை வகுப்பில் தற்போது நடைமுறையில் உள்ள தொழிற்கல்வி பாடத்திட்டத்துடன் துறைசார்திறன் கழகம் (Sector Skill Council) பரிந்துரைத்த பாடத்திட்டத்தையும் இணைத்து 12 தொழிற்கல்வி பாடப்பிரிவுகளில் 8 பாடநூல்கள் மட்டும் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து 12 தொழிற்கல்வி பாடப்பிரிவுகளிலும் (அலுவலக மேலாண்மையும் செயலியலும் தட்டச்சு கணினி பயன்பாடுகளும் நீங்கலாக) இடம்பெற்றுள்ள **'கணினித் தொழில்நுட்பம்'** (Computer Technology) மற்றும் **'கணினிப் பயன்பாடுகள்** (Computer Applications) என்ற பாட நூல்களுக்கு மாற்றாக மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறன்களை மேம்படுத்தும் வகையில் 2022-2023-ஆம் கல்வியாண்டு முதல் **வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills)** என்ற **புதிய பாடநூல்** நடைமுறைப்படுத்தப்பட்டு பாடநூல்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த பாடநூலினை மாணவர்களுக்கு கற்பிக்க ஏதுவாக அனைத்து மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டு பள்ளிகளில் மாணவர்களுக்கு பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, மாணவர்களின் நலன் கருதி இக்கல்வியாண்டு முதல் **வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills)** பாடத்திற்கு காலாண்டு தேர்வுகள் நடத்தும்போது, இப்பாடத்திற்கு 70:30 என்ற விகிதாச்சாரத்தில் 70% பாடக்குறிப்புகளுக்காகவும் 30% செய்முறை பயிற்சிக்காகவும் மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும் எனவும், எழுத்து தேர்வுகளுக்கான 70% கீழ்க்குறிப்பிட்டவாறு மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 30 x 1 மதிப்பெண் | = | 30 மதிப்பெண்கள் |
| 5 x 2 மதிப்பெண்கள் | = | 10 மதிப்பெண்கள் |
| 5 x 3 மதிப்பெண்கள் | = | 15 மதிப்பெண்கள் |
| 3 x 5 மதிப்பெண்கள் | = | 15 மதிப்பெண்கள் |
| மொத்தம் | = | 70 மதிப்பெண்கள் |

மேற்குறிப்பிட்டவாறு மாணவர்களுக்கு வருங்காலங்களில் நடைபெறும் தேர்வுகளில் வேலைவாய்ப்புத் திறன்கள் பாடத்திற்கு மதிப்பெண்கள் வழங்கி தேர்வுகள் சிறந்த முறையில் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு:– மாதிரி வினாத்தாள்

**பள்ளிக்கல்வி ஆணையருக்காக**

21/9/22 21/9/22

**பெறுநர்**

அனைத்து மாவட்டமுதன்மைக் கல்வி அலுவலர்கள்

**நகல்**

1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை–6.
2. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6. ( தகவலுக்காக அனுப்பப்படுகிறது)